புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜனவரி 30, 2025 • புரட்சி 25 • முழக்கம் 03 • விலை ரூ.3.00

## இந்தியாவை இந்து நாடாக்க சங்கிகள் முயற்சி

# கும்பமேளாவில் சாமியார்கள் கொட்டம்

உத்தரப்பிரதேசத்தில் கும்பமேளா நிகழ்ச்சி ஜனவரி 13-ஆம் தேதி தொடங்கப்பட்டு பிப்ரவரி 26-ஆம் தேதி வரை 45 நாட்கள் நடைபெறுகிறது. கும்பமேளாவில் கூடும் சாமியார்கள், 2035-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை இந்து நாடாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

### இந்து அரசமைப்புச் சட்டம்

கும்பமேளா தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துள்ள அம்மாநில முதலமைச்சர் சாமியார் ஆதித்யநாத், "சனாதன தர்மம் இந்தியாவின் தேசிய மதம். அதுவே மனிதத்தின் மதம். நமது வழிபாட்டு முறைகளில் வேறுபாடு இருக்கலாம், ஆனால், மதம் ஒன்றுதான். அந்த மதம் சனாதன தர்மம். அந்த சனாதன தர்மத்தின் பிரதிநிதியாக கும்பமேளா விளங்குகிறது. பிரயாக்ராஜில் நடந்து வரும் மாபெரும் மத நிகழ்வான மகா கும்பமேளா, எந்த ஒரு ஜாதி அல்லது மதத்திற்கும் உட்பட்டது அல்ல. இது அனைத்து மதம், கலாசாரம் மற்றும் சமயங்களின் மாபெரும் கலவையாக திகழ்கிறது." என்று கூறியுள்ளார்.

ஆனால் கும்பமேளாவில் கூடிய சாமியார் கூட்டம் இந்து அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கக் குழு அமைத்துள்ளது. அதில் வட இந்தியாவின் 14 மற்றும் தென் இந்தியாவின் 11 வேத நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனராம். தூய சனாதன இந்து சமுதாயத்தை உருவாக்குவதற்காக, தர்ம சாஸ்திரங்களுடன் ராமராஜ்யம், கிருஷ்ணராஜ்யம், மனுஸ்மிருதி மற்றும் சாணக்யனின் அர்த்தசாஸ்திரத்தைப் படித்து, இந்து அரசமைப்பை உருவாக்கியுள்ளதாகக் கூறுகின்றனர்.

### இந்து நாடாக்க திட்டம்!

அந்தக் குழுவில் காசி ஹிந்து பல்கலைக்கழகம், சம்பூர்ணானந்த சமஸ்கிருத பல்கலைக்கழகம் மற்றும் மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் உட்பட பலர் உள்ளனர். அரசமைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சம்பவி பீடாதீஸ்வர் ஸ்வாமி ஆனந்த ஸ்வரூப் மகாராஜ் 2035-ஆம் ஆண்டுக்குள் இந்து நாடாக இந்தியா அறிவிக்கப்படும் என்கிறார்.

குருகுலத்தின் மூலம் மட்டுமே நாட்டின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்! இந்து தர்மத்தின் அடிப்படையில் தேர்தல் நடைபெறும்; வாக்களிக்கத் தகுதியான நபர்கள் பட்டியலிடப்படுவார்கள். மற்ற மதத்தினர் இங்கு வாழலாம். ஆனால் மற்ற உரிமைகள் சொல்லப்படவில்லை. தர்மசாஸ்திரம் மற்றும் அரசியல் விஷயங்களில் தேர்ச்சி பெற்ற, மாநில நிர்வாகத்தில் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றவரே நாட்டின் தலைவர் பதவிக்குத் தகுதியானவர். இந்து நாடு அரசமைப்பின்படி, யுத்தத்தின் போது தலைவர் தனது தலைமையில் படையைக் கொண்டு செல்ல வேண்டும். நாட்டிற்குத் தலைவரானவர் நீதி, போர் மற்றும் ராஜதந்திர விவகாரங்களில் கைதேர்ந்தவர்களை மட்டுமே அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

அரசமைப்பில் நூற்றுக்கணக்கான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், தர்மசாஸ்திரங்களில் ஒரு திருத்தமும் இல்லை என்று சம்பவி பீடாதீஸ்வர் ஆனந்த ஸ்வரூப் கூறியுள்ளார்.

### இசுலாமியர்களுக்கு உரிமை இல்லை!

இந்து நாடு அரசமைப்பு வடிவமைப்பின்படி, சபையின் பெயர் நாடாளுமன்றம் அல்ல; இந்து தர்ம பீடமாக மாற்றப்படும்; ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் ஒரு தர்ம சாம்சத் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். நாடு முழுவதும் 543 தர்ம சாம்சத் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தர்ம சாம்சதுக்கு குறைந்தது 25 வயதானவர் போட்டியிடலாம்; வாக்களிக்கக் குறைந்த வயது 16 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சனாதன தர்மத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். சீக்கியர்கள், ஜைனர்கள், பவுத்தர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது.

சனாதனத்தை வெறுப்பவர்களுக்கு வாக்கு உரிமை மறுக்கப்படும். தர்ம சாம்சத் உறுப்பினராக மாறுவதற்கு, குருகுலத்தில் வேதம் கட்டாயம் பயின்றிருக்க வேண்டும்.

### கல்லூரிகள் ஒழிக்கப்படுமாம்!

நாட்டுத் தலைவரின் கட்டுப்பாட்டில் முதன்மை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகள் இருப்பார்கள். கல்லூரி போன்ற எந்த அமைப்பும் இருக்காது. ஆங்கிலப் பள்ளிகள் குருகுலங்களாக மாற்றப்படும். அரசு நிதியால் இயங்கும் அனைத்து மதரசா மற்றும் மிஸினரி பள்ளிகளும் இழுத்து மூடப்படும். மனு மற்றும் யாஜ்ஞவல்கியாரின் ஸ்மிருதிகள் நடைமுறையில் கொண்டு வரப்படும். தந்தையின் மரணத்திற்குப் பிறகு மகன்கள் மட்டுமே உரிமையாளர் ஆக இருக்க வேண்டும் என்கிறார்கள். அப்படியானால் பெண்களுக்கு பரம்பரைச் சொத்தில் பங்கில்லை.

கும்பமேளாவில் ஜாதி - மதத்துக்கு இடமில்லை என்கிறார் சாமியார் ஆதித்யநாத். ஆனால் நாட்டை ஜாதிய-இந்துத்துவ மதவாத நாடாக மாற்றுவதற்கு அங்கே கூடி திட்டம் தீட்டுகிறது இந்த சாமியார் கும்பல். இந்த சங் பரிவார் கூட்டத்தை அம்பலப்படுத்துவோம். சனதானிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்போம்.

# கழகப் பொதுச்செயலாளருக்குப் பாராட்டு விழா!

திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளரும், புரட்சிப் பெரியார் முழக்கம் இதழின் ஆசிரியருமான விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு 'பெரியார் விருது' வழங்கி பெருமை சேர்த்தது. இதற்காக பொதுச்செயலாளரின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் சார்பில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள இந்திய அலுவலர்கள் அசோசியேசன் சங்க கட்டடத்தில் 26.01.2025 அன்று பாராட்டு விழா நடத்தப்பட்டது.



மாணவர் நகலக உரிமையாளர் சௌரிராஜன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வாலாசா வல்லவன், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், மருத்துவர் அமலோற்பவநாதன், வீ.அரசு, பேராசிரியர் கல்யாணி,தடா ஓ.சுந்தரம்,பத்திரிகையாளர்கள் சிகாமணி, வீரபாண்டியன், சுகுணா திவாகர், வழக்கறிஞர் அஜிதா, மனநல மருத்துவர் சிவபாலன், மருத்துவர் தாயப்பன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்டோர் பொதுச்செயலாளர் உடனான தங்களது அனுபவங்கள், பொதுச்செயலாளரின் அர்ப்பணிப்புமிக்க இயக்க - எழுத்துப் பணிகளை பாராட்டிப் பல்வேறு செய்திகளை பகிர்ந்து கொண்டனர்.

இறுதியாக ஏற்புரை நிகழ்த்திய கழகப் பொதுச்செயலாளர்,"இந்த விருது தன்னை விட இயக்கத் தோழர்களுக்கே அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களுடைய கொண்டாட்டங்கள்தான் எனக்குள் ஓர் உணர்வலைகளை ஏற்படுத்தியது. அதுபோல இங்கே பேசிய எல்லோரும் என்னை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய இயல்பான பணியைத்தான் நான் செய்திருக்கிறேன். இந்த பணியை நான் விரும்பி செய்திருக்கிறேன். எனக்குத் தெரிந்ததும் இந்த பணி ஒன்றுதான். பெரியாரியலை இன்னும் வீரியமாக மக்களிடம் எடுத்துச் செல்லும் பணியை இனிவரும் காலங்களிலும் மேற்கொள்வேன்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளருக்கு கடந்த ஆண்டு மருத்துவம் பார்த்த மருத்துவர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டு செய்யப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஊடகவியலாளர் மு.குணசேகரன் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் இரவு உணவு விருந்தளிக்கப்பட்டது.

தலையங்கம்

# உதயநிதி ஸ்டாலினைப் பாராட்டுகிறோம்!

டெங்கு, காலராவைப் போல் சனாதனம் ஒரு நோய். அது ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். கடந்த 2023, செப்டம்பரில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில், உதயநிதி ஸ்டாலின் பேசிய இந்த கருத்து நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சங்கிகளும் பார்ப்பனர்களும் கொந்தளித்தார்கள். பல்வேறு மாநிலங்களில் உதயநிதி மீது வழக்குகளைத் தொடர்ந்தார்கள். ஒரு பார்ப்பன சாமியார் அவரது தலைக்கு விலை வைத்தார். உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்தார்கள். ஆந்திராவின் துணை முதல்வர் பவன் கல்யாண் சாபமிட்டார். அவரது கட்சியினர் கோயில் வாசலில் உதயநிதி படத்தை மிதியடியாகப் போட்டு காலால் மிதித்தனர்.

உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது மனுவை விசாரணைக்கு ஏற்ற உச்சநீதிமன்றம், ஒரு அமைச்சரே சனாதனத்தை எதிர்க்கலாமா? கருத்துச் சுதந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தக் கூடாது என்று ஒரு நீதிபதி வெளிப்படையாகவே கருத்து தெரிவித்தார். விளக்கம் கேட்டு உச்சநீதிமன்றம் உதயநிதி ஸ்டாலினுக்கு தாக்கீது அனுப்பியது. ஆனால் உதயநிதி ஸ்டாலின் உறுதியாக நின்றார். மிரட்டலுக்குப் பணியவில்லை. மன்னிப்புக் கேட்க முடியாது என்று மறுத்து விட்டார்.

கடந்த 2025, ஜனவரி 25ஆம் தேதி இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் வேதா எம். திருவேதி மற்றும் பிரசன்னா பி வாலே இந்த ரிட் மனுக்களுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து மனுதாரர்களை நோக்கி கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளனர். உதயநிதி ஸ்டாலின் சார்பில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், இந்த ரிட் மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

சனாதன எதிர்ப்பு என்பதே கிரிமினல் குற்றம் என்றும், உதயநிதி மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், மதச் சுதந்திரத்துக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள சட்டப் பிரிவு 25-க்கு எதிரானது என்றும் மனுதாரர்கள் கோரினார்கள். அதுமட்டுமல்லாமல் மாநாட்டில் பங்கேற்ற அனைவரும் குற்றவாளிகள் என்றும், மாநாட்டை நடத்திய அமைப்புக்கு அந்நிய நாட்டு தீவிரவாதிகளிடம் இருந்து நிதி வந்துள்ளதா என்று சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டது.

இது அரசியல் சட்டத்துக்கு எதிரான பேச்சு அல்ல, இதை நீதிமன்றம் விசாரிக்க தயாராக இல்லை என்று நீதிபதிகள் அறிவித்ததை தொடர்ந்து மனுதாரர்கள் தங்கள் மனுவைத் திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளனர். நீதிபதிகளின் கோபத்தை உணர்ந்து மனுதாரர்கள் தங்கள் மனுவைத் திரும்பப் பெற்றதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. இந்த வழக்கில் ஒன்றிய அரசின் சார்பாக மூத்த வழக்கறிஞர்களே உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக வாதிட்டார்கள் என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். உச்சநீதிமன்றம் தற்போது இந்த அமர்வில் சட்ட விரோதம் கிடையாது என்று கூறினாலும் கடந்த 2024 மார்ச் மாதம் இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி அனிதா சுமந்த் முன்பு விசாரணைக்கு வந்த போது சட்ட விரோதப் பேச்சு என்று நீதிபதி கூறினார்.

சனாதன தர்மத்தை நியாயப்படுத்தும் வகையில் தனது கருத்துகளைப் பதிவு செய்தார். அதைத் தொடர்ந்து நீதிமன்ற வரலாற்றில் இல்லாத அதிசயம் ஒன்றும் நடந்தது. நீதிபதியின் கருத்துக்கள் கடும் கண்டனத்திற்கு உள்ளானதால், இணையத்தில் வெளியான தீர்ப்பு நகலை (மார்ச் 09.2024) நீதிபதி தானாகவே திருத்திக் கொண்டார். தீர்ப்பு நகலை திருத்த வேண்டும் என்று சொன்னால் மீண்டும் நீதிமன்றம் வழியாகவே திருத்த வேண்டும் என்ற சட்ட வழிமுறையை அப்பட்டமாக மீறினார் நீதிபதி அனிதா சுமந்த்.

சனாதனம் என்றால் அது வர்ணாசிரம தர்மம்தான் என்று வேத மத குருவாகப் போற்றப்படும் காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகர சரஸ்வதியே எழுத்து மூலமாகப் பதிவு செய்திருப்பதையும் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். நாடு முழுவதும் வழக்குகளைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலினை மிரட்டி திமுகவுக்கு நெருக்கடியை உருவாக்கலாம் என்று கனவு கண்ட பார்ப்பனிய சக்திகளுக்கு உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சரியான பதிலடியைத் தந்திருக்கிறது. இந்த சலசலப்புகளுக்கு அஞ்சாமல் கொள்கை உறுதியுடன் நின்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைப் பாராட்டுகிறோம்.

# திராவிட மாடல் அரசின் சாதனைகள்

**திராவிட மாடல் ஆட்சி முன்னெடுத்த நடவடிக்கைகளாலும், மக்கள் நலத் திட்டங்களாலும் தமிழ்நாடு முக்கியமான 10 சாதனைகளை 3 ஆண்டுகளில் செய்துள்ளது.**

1. இந்தியாவின் பொருளாதாரத்தில் தமிழ்நாடு 9% பங்கை வகிக்கிறது.
2. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.
3. ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% இருக்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19% உயர்ந்துள்ளது.
4. இந்திய அளவில் பணவீக்கமானது 6.65% இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 5.97% குறைந்து உள்ளது.
5. ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.
6. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது.
7. தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14-வது இடத்தில் இருந்த தமிழ்நாடு 3-வது இடத்துக்கு திராவிட மாடல் ஆட்சியில் முன்னேறி உள்ளது.
8. கல்வியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.
9. புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
10. இளைஞர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

இந்த பத்து சாதனைகள் மட்டுமா என்றால் நிச்சயமாக இல்லை.

நான் முதல்வன் திட்டம் மூலம் இந்த ஆண்டு இதுவரை 85000 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

தொடங்கப்பட்ட ஒரே வருடத்தில் அதாவது 2022-2023-ம் கல்வியாண்டில் 13.14 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு திறன்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 1,48,169 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணிக்கு சேர்ந்துள்ளனர்.

### 3 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் அடைந்த பயன்கள்

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் பயனடைகின்றனர்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 31,000 அரசுப் பள்ளிகளில் 17 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.
- புதுமைப் பெண் திட்டத்தில் 2,72,216 கல்லூரி மாணவிகள் மாதந்தோறும் பயன்பெறுகின்றனர்.
- விடியல் பயணம் திட்டத்தில் மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் 445 கோடி முறை பயணம் செய்து மாதந்தோறும் ரூ.888 சேமிக்கின்றனர்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 1 கோடியே 70 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் 2 இலட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.
- விவசாயிகளுக்கு 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு கூடுதலாக 2,99,384 ஏக்கரில் பயிர் சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- "நான் முதல்வன் திட்டத்தில் பொறியியல், கலை, அறிவியல் கல்லூரி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற 28 இலட்சம் மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.4,818 கோடி கூட்டுறவு நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 13 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500-லிருந்து ரூ.2,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- இரண்டே ஆண்டுகளில் 2226 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ரூ.5,996.53 கோடி மதிப்பிலான6,800.68 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
- 2600 ஆண்டு தமிழர் வரலாற்றை உயர்த்திப் பிடிக்கும் கீழடி அகழாய்வுப் பணியில் கிடைத்துள்ள பொருள்களைப் பாதுகாக்கும் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.
- அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் - ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் மேம்படுத்தவும் ரூ.200 கோடியில் 1,769 பணிகளை நிறைவேற்றியுள்ளது.
- ரூ.2,358.53 கோடி மதிப்பீட்டில் 44 அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் (Polytechnic); ரூ.2,877 கோடி மதிப்பீட்டில் 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களும் (ITI) தொழில் 4.0 அளவிற்குத் தரம் உயர்த்தப்படுகின்றன.

* அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம் 970 பயனாளிகளுக்கு ரூ.131.91 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

* 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 28,601 அரசுப் பள்ளி மாணவ மாணவியர் தொழில் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

# பெரியார் முழக்க சந்தா; சென்னை மாவட்டம் ரூ.30,000-/யை வழங்கியது.

சென்னை மாவட்டக் கழக சார்பில் 2025ஆம் ஆண்டுக்கான புரட்சிப் பெரியார் முழக்க சந்தா தொகையாக ரூ.30,000/- 12.01.2025 அன்று திருவல்லிக்கேணியில் நடந்த பொங்கல் விழாவில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கப்பட்டது. இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

# இந்துமதத்தைக் கருத்தியல் - செயல்ரீதியாகக் கடுமையாகத் தாக்கியவர் அம்பேத்கர்

**24.12.2024 அன்று கோவையில் நடைபெற்ற புரட்சியாளர்கள் அம்பேத்கர் – பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டத்தில் தோழர் இனியவன் ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

இனியவன்

இதனைக் கண்டித்து மகத் நகரில் மீண்டும் அமைதியான வழியில் போராட்டம் நடத்துவது என பம்பாய் தாமோதர் கூட்ட அரங்கில் பேசிய அம்பேத்கர் "சட்டம் சாத்தியமான இடங்களில் வன்முறையற்றதாகவும், தேவையான இடங்களில் வன்முறையாகவும் இருக்க வேண்டும்" என அரசின் பாராமுகத்தைக் கடுமையாக சாடினார் (11 செப்டம்பர் 1927). 1919இல் புதிய சட்டங்களை வடிவமைக்க பிரிட்டிஷ் இந்திய அரசால் அமைக்கப்பட்ட சவுத்பரோ குழுவில் அம்பேத்கர் ஓர் தரப்பின் சாட்சியமாக அழைக்கப்பட்டார் (தலித்துகளுக்கு தனித் தொகுதி, இரட்டை வாக்குரிமை ஆகியவை இந்த குழுவில் தான் அம்பேத்கரால் முதன் முதலில் முன் வைக்கப்பட்டது), 1925இல் சைமன் குழுவில் பம்பாய் மாகாண உறுப்பினராக பணியாற்றிய நிலையில் கூட அவர் தீண்டத்தகாதோர் நலனில் அக்கறை அற்ற பிரிட்டிஷ் இந்திய அரசின் போக்கை விமர்சனம் செய்யவும் தயங்கவில்லை என்பதுடன் சாத்தியமான இடங்களில் வன்முறையும் அவசியமாக இருக்கிறது என்பதையும் தமக்கே உரிய பாணியில் சுட்டிக் காட்டியுள்ளார். ஏற்கனவே முடிவு செய்தபடி 25,26 டிசம்பர் 1927இல் மகத் நகரில் ஜாதி தீண்டாமைக்கு எதிராக தீண்டாத்தகாதோர் உரிமை மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் முதல் நாளான 25 டிசம்பர் காலையில் மாநாட்டு பந்தலில் தீண்டாமை, பெண்ணடிமை ஆகியவற்றை வலிந்துத் திணிக்கும் வர்ணாசிரம சனாதன ஜாதி படிநிலையைக் கற்பிக்கும் "மனுஸ்ருமிதி" நூலை மக்கள் அனைவரும் புறக்கணிக்க வேண்டும் எனக் கூறி தீக்கிரையாக்கினார். அத்துடன் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சதுர் வர்ணாவை நான் நம்பவில்லை, ஜாதி வேறுபாடுகளை நான் நம்பவில்லை என்ற உறுதிமொழியையும் அனைவரும் ஏற்றுக் கொள்ள செய்தார். இந்த மாநாட்டில் 15,000க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், பல்வேறு தரப்பில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கூடிய இந்த மாநாட்டில் 3000 பெண்கள் தன்முனைப்பாகப் பங்கேற்றனர் என்பது வரலாற்றில் ஒரு மைல்கல். கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்வைக்கும் திட்டத்தில் பாலின பேதம் அழிப்பு, பெண் உரிமை ஆகியவை. முக்கிய அம்சங்களாக இருக்கும். பெண்ணுரிமை வெறும் பேசு பொருளாக மட்டும் இல்லாமல் செயல் தளத்திலும் அண்ணல் அம்பேத்கர் நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்பதற்கு மகத் அறவழி போராட்டம் ஓர் வரலாற்று சான்றாகும்.

1921 - 24 வரை கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது பல்வேறு வழக்குகள் பதியப்பட்டன. பிரிட்டிஷ் இந்திய காலனிய அரசால் தொடுக்கப்பட்ட பெஷாவர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு ஆகியவற்றின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் கைதானதுடன், பலர் தலைமறைவாகவும் நேர்ந்தது. இதனால் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற முழு நிலையை அடையாத காரணத்தால் தெளிவான அரசியல் முடிவுகள் எட்ட இயலாமல் போய்விட்டது. அரசின் அடக்கு முறையால் நாடு முழுவதற்குமான ஒன்றிணைந்த கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க இயலவில்லை என்கிற சூழ்நிலையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். 26 டிசம்பர் 1925 இல் தான் நாடு தழுவிய அளவில் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு கான்பூரில் நடைபெற்றது. அம்மாநாட்டில் வர்க்க விடுதலைப் போரில் ஜாதி ஒழிப்பும் அவசியமானது என்ற கருத்தாக்கம் வலுவாக பதிவாகியுள்ளது. என்கிற போதும் அதற்குப் பின்னரும் அரசின் நெருக்கடி 1931 வரை கம்யூனிஸ்ட் கட்சிகளின் வர்க்க ஸ்தாபனங்களான தொழிற்சங்கம், விவசாயிகள் சங்கம் ஆகியவைதான் போராட்டங்களை முன் நின்று நடத்தினர். மேற்கண்ட சூழலை புரிந்து கொண்டால் அண்ணல் அம்பேத்கர் ஜாதி ஒழிப்புப் போராட்டங்களை முன்னெடுத்த பொழுது கம்யூனிஸ்டுகள் என்ன செய்தார்கள் என்கிற கேள்வி எழுவதற்கு வாய்ப்பில்லை.

1927 கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படையாக செயல்பட முடியாத நெருக்கடியில் சிக்கி இருந்த நிலையில் கூட அப்போது துளிர் விட துவங்கிய ஆர்.எஸ். எஸ். அமைப்பின் நோக்கம், அதன் போக்கு, மக்களிடையேப் பிரிவினையை உண்டாக்கி கலவரத்தைத் தூண்டும் அதன் வகுப்புவாதப் போக்கினை, செயல்பாடுகளைக் கவனத்தில் கொண்டு அதனை கடுமையாக விமர்சித்துள்ளது. இருந்த போதும் மதம் என்கின்ற கட்டுமானத்தை நேரடியாகத் தாக்குவது வரட்டு நாத்திகமாக ஆகிவிட சாத்தியம் அதிகம் எனக் கூறி மதத்தை நேரடியாக தாக்காமல் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒதுங்கிக் கொண்டது காலப் பிழையே! அப்போது இருந்த முரண்பாடான சமூக - பண்பாட்டு சூழல்களின் காரணமாக மேற்கண்ட முடிவினை கம்யூனிஸ்ட் கட்சிகள் எட்ட வேண்டிய இடர் ஏற்பட்டிருக்கலாம் என்கிறபோதும் இந்திய சமூகவியல் நோக்கில் மதத்தின் பங்கைக் கணக்கில் கொண்டு அண்ணல் அம்பேத்கர் மதம் என்கிற சுரண்டல்வாத நிறுவன அமைப்பை கருத்தியல் ரீதியாகவும், செயல் தளத்திலும். நேரடியாக தாக்கியுள்ளார் என்பது மிகவும் முற்போக்குத் தன்மை வாய்ந்தது.

## நில உரிமையும் அம்பேத்கரும்

கம்யூனிஸ்டுகளின் முதன்மை முழக்கம் "உழுபவருக்கே நிலம் சொந்தம்" சோவியத் புரட்சிக்கு முந்தைய சூழலிலும், புரட்சி நடந்து முடிந்த சூழலிலும் மேற்கண்ட முழக்கமே உழைக்கும் வர்க்கத்தில் பெரும்பான்மையாக இருந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் சோவியத் எழுச்சிக்கு வழி கோலியது.

நில உடமை என்பது தலித்துகளுக்கு மறுக்கப்பட்டது என்பதை இந்திய சமூகச்சூழல் தெளிவாக படமிட்டு காட்டுகிறது. அவ்வகையில் வரலாற்று நெடுகில் இந்தியா முழுவதும் சல்லடையிட்டு தேடினாலும் கூட ஆதிக்க நில உடமை ஜாதிய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட தலித் ஜாதியினர் எவரும் இருந்திட வாய்ப்பு இல்லை. நில உடமை மட்டுமல்ல ஆயுதம், தங்கம், நெய், நல்ல ஆடைகள் என எதையும் வைத்துக்கொள்ள சூத்திரர்களுக்கு உரிமை இல்லை என மநுவாதம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. தலித்துகள் எவரும் சூத்திரர் இல்லை, இந்துக்கள் இல்லை என்பது வேறு கதை.

இந்தியாவில் பெரும்பான்மையான விவசாயிகள் ஏழையாக இருந்தபோதிலும் அவர்கள் ஜாதி உணர்வின் காரணமாக நில உரிமைப் போராட்டத்தில் விவசாயக் கூலிகளாக இருந்த ஒடுக்கப்பட்ட தலித் மக்களுடன் முழுமையாக இணைந்து போராடத் தயாராக இல்லை. இந்தக் காரணத்தால் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த உழுபவருக்கே நிலம் சொந்தம் என்கிற முழக்கம் முழுமையான பொருளை எட்ட முடியாமல் போய்விட்டது. இந்தியாவில் காலனி ஆதிக்கத்தின் வழியாகத்தான் முதலாளிய சமூக உருவாக்கம் தொடங்கியது. அத்தகைய உருவாக்கம் கூட ஏற்கனவே இங்கே நீடித்திருந்த நில உடமை சமூகத்தின் இணைக்கரமாகவே வளரத் தொடங்கியது. இந்திய கிராமங்களில் உழைக்கும் வர்க்கத்தினர் கூட தீண்டத்தக்கவர், தீண்டத்தகாதவர் என்கிற ஜாதிய முறைப்படியே சமூகத்தில் வாழ முடியும். பொருளாதார வளர்ச்சியிலும், அன்றாட வாழ்வினை மேற்கொள்ளவும் நிலம் தான் அடிப்படையாக இருந்தது. ஆனால் பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிலத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்பதனையும் அத்தகைய நிலைக்கு ஜாதி அமைப்பு முறையே காரணம் (*Dr Babasaheb Ambedkar Writings and Speeches - Vol 5*) என்பதையும் முழுமையாகப் புரிந்து கொண்ட காரணத்தினால் தான் அண்ணல் அம்பேத்கர் "இங்கே ஜாதி என்பது வர்க்கத்தை உள்ளடக்கியதாக உள்ளது" என 1916லேயே தெளிவுபட கூறியுள்ளார். கம்யூனிஸ்ட்களின் நிலம் குறித்தான ஆய்வுகள் இந்தியாவில் ஜாதி என்பது நில உடமை சமூகத்தின் வளர்ச்சியின் போக்கில் நிலைபெற்றுள்ளது எனவும் நில உடமை வீழ்ச்சி அடையும் பொழுது ஜாதியும் வீழ்ச்சியடையும் என்பதாகவே கருதினார்கள். ஆனால் வரலாற்றின் போக்கில் இன்றளவும் கூட ஜாதி இறுக்கத்தை நாம் தெளிவாக அறிய முடிகிறது.

1915 கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த ஓர் ஆய்வறிக்கையில் காலனிய ஆட்சியில் கூட நிலத்தின் மீதான அதிக வரி, அதீத வாடகை காரணமாக ஜமீன்தாரர்கள் மட்டுமல்லாமல் மதராஸ் மாகாணத்தின் ராயத்வாரிகள் (அரசிடம் இருந்து நேரடியாக நிலங்களை குத்தகைக்குப் பெற்ற சிறு குறு விவசாயிகள்) கூட அதிக வரி பாதிப்புக்கு உள்ளானார்கள் என்பதையும், வரி வசூலிக்கும் பணியைப் பரம்பரை, வாரிசு உரிமையைக் காரணம் காட்டி கையிலே வைத்திருக்கும் இடைத்தரகர்களின் நெருக்கடிக்கும் விவசாயிகள் ஆளாக வேண்டியுள்ளது" என விவசாயிகள் பிரச்சனையையும் எடுத்துரைத்துள்ளார்.

## கோட்டி முறைக்கு எதிரானப் போராட்டம் (1920 - 1949)

மகாராஷ்டிரா மாநிலம் கொங்கன் பகுதியில் 1502 முதல் தொடங்கிய "கோட்டி" முறை (கூட்டி முறை எனவும் கூறுவார்கள்) என்பது நிலத்தின் மீதான அதிகாரத்தை வலியுறுத்தும் ஜமீன்தாரி வகையைச் சார்ந்தது. கோட்டி அதிகாரிகளாக இருந்தவர்கள் பெரும்பாலும் சித்பவன் பார்ப்பனர்கள், குஜராத்தி வாடிகள், மார்வாரிகள் ஆவர். கோட்டி அதிகாரியாக உள்ளவர் தனது இஷ்டம்போல் நிலத்தின் மீது வரியை வசூலித்துக் கொள்வதுடன், உழைக்கும் மக்களிடமிருந்து தனது நிலத்திற்கான உழைப்பை இலவசமாகப் பெற்றுக் கொள்வதும், விவசாயிகள் உற்பத்தியின் லாபத்தை பெரும் பங்கு வாங்கிக் கொள்ளவும் அதிகாரம் கொண்டவர்களாக இருந்தார்கள். இம்முறையை தடை செய்ய பிரிட்டிஷ் அரசு எடுத்த முயற்சியை எதிர்த்து பால கங்காதர திலகர் போராட்டம் நடத்தினார். இதிலிருந்து இம்முறையினால் பலன் பெற்றவர்கள் நமக்கு யார் என்று தெரியும். அதன் பிறகு பார்ப்பனர் அல்லாத வகுப்பினை சார்ந்த எஸ்.கே.போலே அவர்கள் கோட்டி முறையினை முற்றிலுமாக ஒழித்திட வேண்டி முன்னெடுத்தப் போராட்டத்திற்கு அண்ணல் அம்பேத்கர் தன்முனைப்பாக ஆதரவளித்தார். 1929இல் விவசாயக் கருத்தரங்கில் அண்ணல் அம்பேத்கர் கோட்டி முறைக்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டும் என முழங்கினார். அதன் தொடர்ச்சியாக 1930களில் அம்பேத்கரின் ஒத்துழைப்போடு கொங்கன் பகுதியில் கோட்டி முறையை ஒழிக்கக் கோரி விவசாயிகள் போராட்டம் வலுவாக நடைபெற்றது.

1936 அண்ணல் உருவாக்கிய சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் முதன்மை நோக்கம் நிலமற்றவர்கள், வரிய வாடகைதாரர்கள், விவசாயிகள் மற்றும் நகர்ப்புற தொழிலாளர்களின் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை முன்னெடுத்து செல்வது ஆகும். ஜாதி மற்றும் வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்சனைகளை அணுகுவதை தனது கட்சியின் தனது கட்சியின் முதன்மை கருத்தாக கொண்டிருந்தார். தனது கட்சி நில அடமான வங்கிகள் உருவாக்குவது, உற்பத்தியை அதிகப்படுத்த விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் விற்பனை சங்கங்கள் உருவாக்குவது, மேலும் "கோட்டி" முறையை ஒழிப்பது ஆகியவற்றை முதன்மை வேலையாக *Times of India* நேர்காணலில் தெரிவித்திருந்தார் (15 ஆகஸ்ட் 1936). 17 செப்டம்பர் 1937 இல் பம்பாய் மாகாண சபையில் கோட்டி முறையை ஒழிக்கக் கோரி சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் சார்பாக அண்ணல் அம்பேத்கர் முன்வைத்த வரைவை இந்து மகாசபை உறுப்பினர் கடுமையாக எதிர்த்தார்கள். அப்போது ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ், அம்பேத்கரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்து புறந்தள்ளியது. கோட்டி முறையினால் விவசாயிகள், வாடகைதாரர்கள் படும் துயர்களை உழைக்கும் மக்களிடம் அம்பேத்கர் கொண்டு சென்றார் அதனைத் தொடர்ந்து கோட்டி முறையை ஒழிக்கக் கோரி 12 ஜனவரி 1938இல் 25,000 விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி பம்பாயில் நடைபெற்றது. இப்பேரணிக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் தனது முழுமையான ஆதரவை வழங்கி பெருமளவு பங்கேற்றது. அதன்பிறகு கூட ஆளும் வர்க்க அரசுகள் கோட்டி முறையை ஒழிக்க முன்வரவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் 1949ஆம் ஆண்டு கோட்டி முறை முற்றிலுமாக தடை செய்யப்பட்டது. எப்படி இருந்த போதிலும் 1920 முதல் 1949 வரை கோட்டி முறைக்கு எதிராக நடைபெற்றப் போராட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் ஜாதிரீதியாக பிளவுபட்டிருந்த விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை பெருமளவில் ஒன்றிணைத்து போராட்டங்களை முன்னெடுத்து உழைக்கும் வர்க்க ஒற்றுமையை செயல்படுத்திக் காட்டியுள்ளார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.


(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஆமைக்கறி சீமான் அம்பலமானார்!

2008-ஆம் ஆண்டு இறுதிப்போருக்கு முன்பாக திரைப்படக் குழுவினருடன் ஈழத்திற்கு சென்ற சீமான், கடந்த 15 ஆண்டுகளாக அந்தப் பயணம் தொடர்பாக எண்ணற்றக் கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டுள்ளார். மனநோயாளியைப் போல சீமான் கூறிவந்த அந்தப் பொய்களை, தமிழ்நாட்டு மக்கள் வேடிக்கையுடன் கடந்து சென்றனர். ஆனால் இப்போது பெரியார் மீது அவர் வைத்திருக்கும் அருவருப்பான அவதூறுகளால் தமிழ்நாட்டு மக்கள் கொந்தளித்துள்ளனர்.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி, சர்வதேச அளவில் சீமானின் இந்த புளுகு மூட்டைகளை அம்பலப்படுத்தத் தொடங்கியுள்ளனர். ஆரிய இழிவில் இருந்து தமிழர்களை விடுவிக்க வாழ்நாளெல்லாம் உழைத்தத் தந்தை பெரியாரையும், ஈழத்தில் தேசிய இன விடுதலைக்காகப் பெரும்படை கட்டிப் போரிட்ட மேதகு பிரபாகரனையும் நேரெதிர் எதிரிகளாகச் சித்தரிக்க முயன்ற சீமானின் சூழ்ச்சியை விடுதலைப் புலிகளும், அவர்களோடு அணுக்கமாக இருந்தவர்களும் உடனடியாக கண்டித்து அறிக்கை வெளியிட்டு, சீமானுக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளனர்.



குறிப்பாக பிரபாகரன் அவர்களின் அண்ணன் மகன் கார்த்திக் மனோகரன், நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், “சீமான் 8 முதல் 10 நிமிடங்கள் மட்டுமே பிரபாகரனை சந்தித்தார். அவர் கூறியது போல கறி இட்லி சமைக்கும் பழக்கம் எங்களிடத்தில் இல்லை. சித்தியை (மதிவதனி) அவர் சந்திக்கவே இல்லை. பிரபாகரனோடு இருப்பது போன்று எடிட் செய்த படத்தைத்தான் அவர் வெளியிட்டிருக்கிறார். அந்தப் படம் உண்மையில்லை. எல்லாளன் ஆவணப் படத்திற்கான குழுவில் இருந்த ஒளிப்பதிவாளர் சந்தோஷிடம் கேட்டால் பல உண்மைகள் வெளியே வரும்” என்று பல உண்மைகளைப் போட்டுடைத்தார். ஏற்கெனவே இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் அந்த படத்தை நான்தான் எடிட் செய்து கொடுத்தேன் என்று கூறியிருந்தார்.



இதையடுத்து நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சந்தோஷிடம் மிக நீண்ட பேட்டி எடுத்து ஒளிபரப்பியது. அந்த பேட்டியில், கார்த்திக் மனோகரன் கூறியது அனைத்தும் உண்மை என்று உறுதிப்படுத்திய சந்தோஷ், மேலும் பல தகவல்களை வெளியிட்டுள்ளார். “வன்னி அரசு பரிந்துரையின் பெயரில்தான் சீமான் ஈழத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதுவும் தோல்விப் பட இயக்குநர்கள் இருந்தாலே போதுமானது என்ற விடுதலைப் புலிகளின் அறுவுறுத்தல்படியும், பெரியாரிய இயக்க மேடைகளில் பேசுபவர் என்ற அடிப்படையிலும்தான் சீமான் ஈழத்திற்கு வரவழைக்கப்பட்டார். அவர் ஈழத்தில் இருந்த சமயத்தில் கூட, தலைவர் பிரபாகரனுக்கு சீமான் என்றால் யாரென்றே தெரியாது.

சீமான் 2008-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதி ஈழத்திற்கு வந்தார். 23-ஆம் தேதி அங்கிருந்து திரும்பிவிட்டார். இவர் தலைவர் பிரபாகரனை சந்தித்தது பிப்ரவரி 13-ம் தேதி. தலைவரைச் சந்திக்க வேண்டுமென்று இவர் தொடர்ந்து தொந்தரவு கொடுத்ததால்தான் அழைத்துச் செல்லப்பட்டார். 8-9 நிமிடங்கள் மட்டுமே இந்த சந்திப்பு நடைபெற்றது. அப்போது நானும் உடனிருந்தேன். அப்போது படங்கள், வீடியோக்கள் எடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அவை என்னிடமும் உள்ளன. இதுவரை வெளியிடப்படவில்லை. இனியும் வெளியிடமாட்டேன். ஆனந்தவிகடனில் வெளியான படம் போலியானது.

துப்பாக்கியோடு இவர் பயிற்சி எடுப்பதுபோன்ற படங்கள் போர்க்களத்தில் எடுக்கப்பட்டது அல்ல. படப்பிடிப்புத் தளத்தில் எடுக்கப்பட்டவை. அதைப் பகிர்ந்துதான் தலைவர் எனக்குப் பயிற்சி கொடுத்தார் என பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்கிறார் சீமான். அவர் கூறியது போல ஆமைக்கறி உண்ணும் பழக்கம் அங்கு உள்ளது. ஆனால் அது எப்போதாவதுதான் கிடைக்கும். 7, 8 மாதங்கள் இருந்த நானே நான்கைந்து முறைதான் சாப்பிட்டுள்ளேன். சீமான் இருந்தபோது ஒருமுறை கூட ஆமைக்கறி தரப்படவில்லை. மற்றவர்களுக்கு அங்கு நடந்ததாகச் சொன்னவற்றையெல்லாம் தொகுத்து, தனக்கே நடந்ததுபோல கட்டுக்கதைகளை சீமான் கூறியிருக்கிறார்.

கடைசியாக இறுதிப்போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், சூசையோடு சீமான் உரையாடியதாக வெளியான ஆடியோ முழுமையானது அல்ல. அந்த உரையாடலுக்கு ஏற்பாடு செய்ததே நான்தான். அப்போது ஈழப்போர் தொடர்பாக பல மேடைகளில் உணர்ச்சிப்பூர்வமாக சீமான் பேசிக்கொண்டிருந்ததால் சூசை அவரோடு பேசினார். ஆனால் சீமானிடம்தான் இந்த இயக்கத்தை ஒப்படைத்துச் செல்வதாக அவர் கூறவே இல்லை. ஒரு பகுதியை மட்டும் சீமான் வெட்டி பரப்பிவிட்டார். அந்த ஆடியோவில் கொளத்தூர் மணி, பழ நெடுமாறன், வைகோ என பல்வேறு தலைவர்களின் பெயரை சூசை குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்ல, சேரலாதன் ஒருமுறை சீமானிடம் ஸ்கைப் மூலம் பேச நினைத்தபோது, சீமான் அப்போது நடிகை விஜயலட்சுமியுடன் இருந்தார். சீமானுடன் பேசுவதை அப்போதே நிறுத்திவிட்டார்” என்று அடுக்கடுக்கான உண்மைகளை வெளியிட்டுள்ளார்.



இந்த பேட்டியில், எல்லாளன் ‘ திரைப்படத்திற்கான ஒளிப்படக்கலை பொறுப்பாளர் அமரதாஸும் சில படங்களை எடுத்ததாகவும், அவரும் இதுவரை வெளியிடவில்லை என்றும் சந்தோஷ் கூறியிருந்தார். இதையடுத்து சன் நியூஸ் தொலைக்காட்சியின் ஊடாக அமரதாஸும் பல்வேறு உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளார். “ஆணையிறவு முகாமில் இருந்து சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதியில் எல்லாளன் படத்திற்கான படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் 2,3 நாட்கள் மட்டுமே சீமான் அங்கு வந்தார். அப்போது அங்கிருந்த ஆயுதங்களை வைத்து படம் எடுக்க வேண்டுமென்று சீமான் விரும்பினார். நான்தான் அந்த படங்களை எடுத்தேன். பிரபாகரன் தமக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்ததாகக் கூறுவது முற்றிலும் பொய்.

சீமான் ஆயுதங்களை வைத்திருக்கும் படங்களை உற்று நோக்கினால் சினிமா படப்பிடிப்புகளில் பயன்படுத்தக் கூடிய தெர்மாகோல் அவர் பின்னால் இருக்கும். அதேபோல சீமான் துப்பாக்கி ஒன்றை தமது கை இடுக்கில் வைத்திருப்பார். பொதுவாக ஆயுதங்களைக் கையாள்வதற்கு என ஒரு முறை இருக்கிறது. சீமான் பிடித்திருப்பது போல கை இடுக்கில் வைத்துக் கொண்டு எல்லாம் சுட்டு விடவும் முடியாது. அதேபோல படப்பிடிப்பு நடந்த இடத்தில் ஒரு குண்டு கூட சுடவும் முடியாது. சில கிலோ மீட்டர் தொலைவில் இலங்கை ராணுவ முகாம் இருந்ததால் அப்படி பயிற்சி எடுக்கவும் முடியாது. சீமான் புகழ் விரும்பியாக இருந்தார் என்பதால், சீமானுக்கு இந்த படங்களைத் தரவே கூடாது என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருந்தனர். பிரபாகரனை மீண்டும் மீண்டும் சந்திக்க வேண்டும் என நச்சரித்து கொண்டிருந்ததால் அவரை உடனே அங்கிருந்து அனுப்பிவிட வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருந்தனர்.

பிரபாகரனை முன்வைத்து அரசியல் சூதாடும் சீமான் அத்துடன் வீரச்சாவடைந்த புகழ்மாறனுடன் இருக்கும் படத்தை காண்பித்து அவர்தான் தமக்கு மெய்ப்பாதுகாப்பாளராக பிரபாகரனால் நியமிக்கப்பட்டிருந்தவர் என்றெல்லாம் கட்டுக்கதை சொல்லிவருகிறார். பெரியாரா? பிரபாகரனா? என சீமான் பேசுவது பிரபாகரனை முன்வைத்து நடத்தும் அரசியல் சூதாட்டம்.” என்று கூறியுள்ளார்

## புரட்சிப் பெரியார் முழக்கம்

**ஆண்டு சந்தா : ரூ.300/-**

**ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/-**

**தொடர்புக்கு : 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 600096. பேச : 89733 41377**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 31, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran